# நாம் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான சட்டங்கள்

## குழந்தைகளுக்கான சட்டங்கள்:

- குழந்தைகள் பாலியல் வன்கொடுமை
- குழந்தை தொழிலாளர் தடை சட்டம்
- கருவில் இருக்கும் குழந்தை ஆணா பெண்ணா என பார்ப்பது
- குழந்தை திருமணம்
- குழந்தைகளைக் கடத்தி விற்பது
- வீட்டை விட்டு ஓடிவரும் குழந்தைகளுக்கான பாதுகாப்பு சட்டம்
- குழந்தைகள் கல்வி பாதுகாப்பு சட்டம்

## பெண்களுக்கான சட்டங்கள்:

- வரதட்சனை கேட்டல்
- பெண்களை கேலி செய்தல்
- விவாகரத்து சட்டம்
- பெண்களுக்கான சம ஊதிய உரிமை
- கண்ணியம் மற்றும் ஒழுங்கை தற்காத்துக் கொள்ளும் உரிமை
- பணியிடத்தில் பாலியல் தொல்லை
- வன்கொடுமை தடுப்புச் சட்டம்
- முதல் தகவல் அறிக்கை இல்லாமலேயே நடவடிக்கை எடுக்கும் உரிமை
- பெண்களுக்கான சொத்துரிமை
- பெண்களுக்கான திருமண சட்டம்
- பெண்கள் உடல் நலம் குறித்த சட்டங்கள்

## வாகனச்சட்டங்கள்:

- மோட்டார் வாகனச் சட்டங்கள்
- சாலை விதிகளை மீறுதலுக்கான தண்டனை

## பொதுவானச்சட்டங்கள்:

- கொலை மிரட்டல்
- வீடு புகுந்து கொள்ளை
- பொது சொத்தை சேதப்படுத்துதல்

- கடத்தல் குற்றம்
- வழிப்பறி
- சொத்துரிமை சட்டங்கள்
- சாலைகளில் குப்பை கொட்டுதல்
- அதிகவிலைக்கு பொருட்களை விற்பனை செய்வது
- ஒருவரை முறையற்ற வகையில் கைது செய்வதிலிருந்து பாதுகாத்து கொள்வது
- ஊழல் தடுப்பு
- அவதூறு வழக்கு
- மோசடி
- விலங்குகளை துன்புறுத்துவது
- பயணச்சீட்டு பெறாமல் பயணம் செய்வது
- அதிக கட்டணம் வசூலிப்பது
- லஞ்சம் கேட்பது
- உணவு கலப்படம்
- சுற்றுசூழலை மாசுபடுத்துவது

## குழந்தைகளுக்கான சட்டங்கள்

### குழந்தைகள் பாலியல் வன்கொடுமை:

'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' என்று பாடினார் மகாகவி பாரதியார். அவரது கூற்றை உண்மையாக்கும் வகையில் இன்றைய புதுமைப்பெண்கள் விண்ணைத்தொடும் அளவுக்கு பல சாதனைகளை நிகழ்த்தி வருகின்றனர்.

பெண்களின் சாதனைப் பட்டியல் நீண்டு கொண்டே செல்லும். அதே தருணத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சனைகள் இன்றும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொண்ட போதும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. பெண்களின் பாதுகாப்பு குறித்து பல்வேறு மட்டங்களில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது.

குழந்தைகள் மீதான பாலியல் கொடுமைகளுக்கான சட்டங்கள் பற்றிய புரிதல், அச்சுறுத்தல், குழந்தையின் எதிர்காலம் குறித்த பயம் போன்ற காரணங்களால் இம்மாதிரியான சம்பவங்கள் வெளியே தெரியாமல் மறைக்கப்பட்டு வருகின்றன. இக்காரணங்களே பாதிக்கப்பட்டவர்களுக்கு

அநீதியை எதிர்த்து போராடும் துணிவைக் குறைத்துவிடுகின்றது. இதற்கு காரணம் அடிப்படை சட்டங்கள் பற்றிய போதிய விழிப்புணர்வு இன்மையே காரணம். அவ்வகை சட்டங்களை பற்றி நாம் இப்போது காண்போம்.

## குழந்தைகள் பாலியல் கொடுமை தடுப்பு சட்டம், 2011

இந்தியாவில் குழந்தைகள் பாலியல் கொடுமை தடுப்பு சட்டம் 2011ம் ஆண்டு **(Protection of Children against Sexual Offences Bill, 2011)** கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின் படி குழந்தைகளிடம் பாலியல் வன்முறை, ஆபாச படம் எடுத்தல், சித்திரவதை ஆகிய குற்றங்களில் ஈடுபடுவோருக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும்.

### பாலியல் வன்கொடுமைக்கு எதிரான தண்டனைகள்:

- இந்த சட்டத்தின் படி ஒருவருக்கு அதிகபட்சமாக 7 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், ரூ.50,000 அபராதமும் வசூலிக்கப்படும்.
- வாய்வழி பாலியல் உறவுக்கு குறைந்தது 5 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ.50,000 அபராதமும் வசூலிக்கப்படும்.
- குழந்தைகளிடம் தவறான முறையில்(Fondling) நடந்துக் கொள்ளும் பெரியவர்களின் செயல்கள் பாலியல் தொந்தரவாக கருதப்பட்டு, அம்மாதிரியான செயல்களுக்கு குறைந்தபட்ச தண்டனையாக 3 வருடம் சிறை தண்டனை விதிக்கப்படும்.
- இச்சட்டத்தின் பகுதி 7ல் 16 முதல் 18 வயது வரை உள்ளவர்கள் தங்கள் சுய விருப்பத்தின் பேரில் உறவு வைத்துக்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளது.
- மாற்று திறனாளிகள், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியவர்கள் மீது பாலியல் குற்றங்கள் புரிந்தால் 12 ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனை வழங்கப்படும்.
- இந்த புதிய சட்டம் குழந்தைகளை எல்லா விதமான பாலியல் குற்றங்களிலிருந்தும் பாதுகாக்கின்றது.
- சிறுவர்களுக்கான பாலியல் தொல்லைகளை தடுக்க புதியதாக சிறப்பு நீதிமன்றங்களை அமைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

### யாரிடம் புகார் அளிப்பது?

குழந்தைகள் பாலியல் வன்கொடுமை குறித்த புகாரினை காவல் நிலையத்தில் தெரியப்படுத்த வேண்டும்.

# குழந்தைத்தொழிலாளி

**"பதின்பருவ பட்டாம் பூச்சி**
**பச்சை வயல் தேடி பறக்க இயலவில்லை**
**பாடசாலை ஆசையோ பாதியிலே கனவாக**
**பசியும் பணமும் சேர்ந்து விரட்ட**
**சேர்ந்தது இரும்புபட்டறையில்"**

வறுமையின் காரணமாக கனவாக மாறிப்போன ஒரு குழந்தையின் வாழ்க்கையை இந்தக் கவிதை பிரதிபலிக்கிறது. தமிழகத்தில் குழந்தை தொழிலாளர்களே இல்லை என்ற நிலையை உருவாக்கி, குழந்தைகளின் சமூகபாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டியது தமிழக அரசின் கடமை. அதனை உணர்ந்து அரசாங்கம் பாதுகாப்புச் சட்டம் இயற்றினாலும் குழந்தைத் தொழிலாளர்கள் உருவாவதைத் தடுக்க முடிவதில்லை. காரணம் அவர்களுடைய வறுமை. தனக்கோ, தன் குடும்பத்திற்கோ போதிய உணவோ, வருமானமோ இல்லாத சூழலில் வேறு வழியின்றி வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் உருவாகிறது. தவிர வேறு சில காரணங்களாலும் குழந்தைத் தொழிலாளர்கள் உருவாக்கப்படுகிறார்கள். இதற்கு என்ன காரணம்? குழந்தைத் தொழிளாலர்கள் உருவாவதைத் தடுப்பதற்கான சட்ட விதிமுறைகள் என்ன? அதற்கான தண்டனைகள் என்ன? என்பது பற்றி பார்ப்போம்.

## குழந்தைதொழிலாளர் தடைச்சட்டங்கள்:

## தொழிலாளர்கள்சட்டம் 1948:

14 வயதுக்கு கீழே உள்ள குழந்தைகளை எந்தவொரு தொழிற்சாலைகளிலும் பணியில் அமர்த்தக் கூடாது என்பதே இச்சட்டத்தின் நோக்கமாகும். இச்சட்டம் 15-18 வயதுக்குள்ளவர்கள் எந்த தொழிற்சாலைகளில், எவ்வளவு நேரம், எப்பொழுது பணியில் ஈடுப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் வரையறுக்கிறது.

## குழந்தைத் தொழிலாளர் (தடுப்பு ஒழுங்குமுறை சட்டம்) 1986:

- குழந்தைத் தொழிலாளர் சட்டம் என்பது சிறுவயது குழந்தைகளை கடுமையான உழைப்பில் ஈடுப்படுத்தாமல் காப்பதற்கான சட்டமாகும். இந்த சட்டத்தின்படி 14 வயதுக்குட்ப்பட்ட சிறுவர், சிறுமிகள் எவரையும் எந்த நிறுவனமும் பணியில் அமர்த்தக் கூடாது.

- இந்த சட்ட நடவடிக்கையின் நோக்கமே குழந்தை தொழிலாளர்கள் இல்லாமல் செய்வதும், கடுமையான தொழில்களில் ஈடுப்படுத்தப்படும் சிறுவர், சிறுமிகளை மீட்பதாகும்.

## குழந்தைகள் இளம்நீதி (பராமரிப்புமற்றும்பாதுகாப்பு) 2000 சட்டம்:

அபாயகரமான வேலையில் மற்றும் அடிமைத்தனமான வேலையில் குழந்தைகளை அமர்த்தக் கூடாது என்பதை விவரிக்கிறது.

## அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாய கல்விச்சட்டம் 2009:

இச்சட்டம் 6 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை இலவச மற்றும் கட்டாய கல்வி அளிப்பதற்கான சட்டமாகும்.

### தண்டனைகள்:

- குழந்தைத்தொழிலாளர் (தடுப்பு ஒழுங்குமுறை) சட்டம் 1986 குழந்தைத் தொழிலாளர்களை வேலையில் அமர்த்துபவர்களுக்கு கடுமையான பல தண்டனைகளை வழங்குகின்றது.
- பிரிவு 3 அல்லது 3A -ன் கீழ் இழைக்கப்படும் குற்றங்களுக்கு - 6 மாதம் முதல் இரண்டு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையோ அல்லது 25 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை அபராதமோ வழங்கப்படும் அல்லது இரண்டுமே சேர்த்துத் தண்டனையாக வழங்கப்படலாம்.
- மீண்டும் மீண்டும் குழந்தைகளை பணியில் ஈடுப்படுத்தும் முதலாளிகள் மீது 1 ஆண்டு முதல் 3 ஆண்டு வரை சிறைத்தண்டனை வழங்கப்படும்.
- பெற்றோரோ அல்லது பாதுகாவலரோ தங்கள் குழந்தைகளை பணியில் அமர்த்த அனுமதித்தால் முதல் குற்றத்திற்கு தண்டனை கிடையாது. ஆனால் மறுபடியும் அதே குற்றத்தில் ஈடுப்பட்டால் ரூ.10,000 வரை அபராதம் விதிக்கப்படும்.

### புகார் அளிக்கும் முறை:

இது மாதிரியான சம்பவங்கள் உங்களுக்கு தெரிய வந்தால் www.pencil.gov.in என்ற இணையதளம் மூலம் புகார் அளிக்கலாம்.

# கருவில் இருக்கும் குழந்தை ஆணா பெண்ணா என பார்ப்பது

## பாலினத் தேர்வு தடைச்சட்டம் 1992:

கருவில் உள்ள குழந்தை ஆணா, பெண்ணா என்பதை ஸ்கேன் செய்து தெரிந்துகொள்வதும், தெரிவிப்பதும் தண்டனைக்குரிய குற்றமாகும். பாலினம் கண்டறியும் பரிசோதனைகள் பற்றிய விளம்பரங்களை இணையதளங்களில் பதிவிடக்கூடாது என இணையத்தளங்களுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

## ஸ்கேன் பரிசோதனை:

கருவில் இருக்கும் குழந்தையின் ஆரோக்கியத்தைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் ஸ்கேன் பரிசோதனை செய்யப்படுகிறது. மூளைவளர்ச்சியின்மை, இதயக்கோளாறுகள், சிறுநீரகம் வளராமல் இருப்பது, டவுன்சிண்ட்ரோம் போன்ற பிரச்சனைகள் குழந்தையிடம் இருப்பது தெரிந்தால் கருக்கலைப்பு செய்ய அரசாங்கமே இதற்கு அனுமதி அளிக்கின்றது. குழந்தை வாழ்வது சிரமம் அல்லது பிறந்த உடனே இறந்துவிடும் என்கிற பட்சத்தில் முதல் 12 வாரங்களுக்குள் கருக்கலைப்பு செய்து கொள்ள சட்டம் இதற்கு அனுமதி அளிக்கின்றது. 12 முதல் 20 வாரங்களுக்குள் கருக்கலைப்பு செய்ய 2 மருத்துவர்களின் ஒப்புதல் தேவைப்படுகிறது.

## PNDT சட்டம்:

அல்ட்ராசவுண்ட் தொழில்நுட்பம் பரவலாக ஆரம்பித்த 1990ம் ஆண்டுக்குப் பிறகுதான் கருக்கலைப்பு சம்பவங்கள் நடக்க ஆரம்பித்தன. இந்தக் குற்றத்தைத் தடுக்கும் முயற்சியாக **Pre-Natal Diagnostic Techniques Act (PNDT)** என்ற பாலினத்தைத் தேர்வு செய்வதைத் தடைசெய்யும் சட்டம் 1994ம் ஆண்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

## தண்டனைகள்:

- இந்த சட்டத்தின் படி கருவில் இருப்பது பெண் என்பதை ஒரு மருத்துவர் தெரிவித்தால், 3 ஆண்டுகள் வரை சிறைதண்டனையும், ரூ.10,000 வரை அபராதமும் விதிக்கப்படும்.